| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>திரு.சின்னசாமி<br>த/பெ.திரு.ராமன் | அ.வ.எண். 336/2014 | 21.07.2026 |

<u>5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) இவ்வழக்கினை யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் செல்வராஜ்க்கு எதிராக. தற்போது செல்வராஜ்க்கு எதிராக மட்டுமே இவ்வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். 2014 ல் இவ்வழக்கு தாக்கல் செய்தபோது எனது பிராது சங்கதிகளை கூறியது நான் தான் என்றால் சரிதான். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூல சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

2) நான் எந்த புல எண்ணை பொறுத்து இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் புல எண்.337/10. தற்போது நான் வழக்கு நடத்துவதும் புல எண்.337/10 ஐ பொறுத்தே என்றால் சரிதான். 2014 ல் இவ்வழக்கு தாக்கல் செய்தபோது எனது பிராதில் சொத்து விவரத்தில் 2 அயிட்ட சொத்துக்களை காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல.

3) எனது பிராதில் சொத்து விவரத்தில் 1 ம் அயிட்டமாக சிறுக்குடி கிராமம் புஞ்சை சர்வே எண்.337/9 ல் 2–1/2 செண்ட் நிலம், 2 வது அயிட்டமாக சிறுக்குடி கிராமம் புஞ்சை சர்வே எண்.337/10 ல் 9 செண்ட் நிலத்தில் 3 செண்ட் நிலமும் நடைப்பாதை பாத்தியமும் காட்டப்பட்டுள்ளது என்று வழக்கு தாக்கல் செய்த போது படித்துப் பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை, வழக்கறிஞர் படித்து காட்டினார்.

4) நான் எனது முந்தைய வழக்கறிஞரிடமிருந்து வழக்கு கோப்பை பெற்று எத்தனை ஆண்டு இருக்கும் என்றால் 4 வருடங்கள் இருக்கும். கடந்த 4 வருடங்களில் எனது பிராது சங்கதிகளை படித்துப் பார்த்து

தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. எனது தற்போதைய வழக்கறிஞரிடம் வழக்கு விவரங்களை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். தற்போது வழக்குரை தபசில் விவரத்தில் 1, 2 அயிட்ட சொத்துக்கள் உள்ளது என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன்.

5) புல எண்.337/9 ஐ விட்டுவிட்டு புல எண்.337/10 ற்கு மட்டுமே வழக்கு நடத்த வேண்டும் என்று, எனது பிராது தபசிலை திருத்தம் செய்யவில்லை என்றால் சரிதான். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்திலும், புல எண்.337/10 ற்கு மட்டுமே வழக்கு நடத்துவதாக கூறவில்லை என்றால் சரிதான். புல எண்.337/10 ன் விஸ்தீரணம் என்ன என்றால் 3–1/2 ஏர்ஸ்க்கு 9 சென்ட்.

6) புல எண்.337/10 ல் எனக்கு எவ்வளவு விஸ்தீரணம் பாத்தியம் என்றால் 3 சென்ட்ம் அதற்கான நடைப்பாதையும். அப்படியானால் மீதமுள்ள 6 சென்ட் விஸ்தீரணம் யாருக்கு பாத்தியம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது பிராது தபசிலில் புல எண்.337/10 ற்கு நான் காட்டியுள்ள நான்கு எல்லை சரியானது என்றால் சரியாக தான் காட்டியுள்ளேன். புல எண்.337/10 ற்கு நான்கு எல்லை என்ன என்றால் கிழக்கே செல்வராஜ் வீடு, தெற்கே வெள்ளையனின் பட்டா இடம், மேற்கே எனது பிளாட் எண்.9 உள்ளது, வடக்கே மீதமுள்ள 6 சென்ட் உள்ளது.

7) நான் இவ்வழக்கை தாக்கல் செய்ததற்கு முன்போ, தாக்கல் செய்த போதோ, வழக்கு சொத்துக்களுக்கான புல வரைபடம் மற்றும் அ பதிவேட்டை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். நான் இவ்வழக்கை எனது தகப்பனார் பெற்ற கிரைய ஆவணத்தில்

அடிப்படையில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 எனது தகப்பனார் பெற்ற கிரைய ஆவணத்தை படித்துப் பார்த்துள்ளேனா என்றால் படித்துப் பார்த்துள்ளேன்.

8) எனது வழக்குரை தபசில் விவரத்தில் புல எண்.337/10 ற்கு நான்கெல்லை காட்டும்போது வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் கண்ட நான்கெல்லையையே காட்டியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் முன் கிரையதாரர் முத்துராஜா மகன் கரிவண்டனுக்கு B மெமோ மூலம் அதில் கண்ட சொத்து பாத்தியப்பட்டதாகவே கண்டுள்ளது என்றாலும், கிரையப்படி பாத்தியப்பட்டதாக எதுவும் காட்டப்படவில்லை என்றாலும் சரிதான்.

9) வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் தபசில் விவரத்தில் 3 சென்ட் மட்டுமே காட்டப்பட்டுள்ளது என்றாலும், வேறு சொத்துக்கள் எதுவும் அவரது அனுபவத்தில் இருந்து கிரையம் செய்து கொடுப்பதாக எதுவும் காட்டப்படவில்லை என்றாலும் சரிதான். எனது தந்தையின் முன் கிரையதாரரான கரிவண்டன் பெயரில் உள்ள B மெமோ எதனையும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

10) வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தை ஏற்படுத்தி கொடுத்த கரிவண்டன் தான் கிரையம் பெற்று, தன் பெயரில் B memo ஏற்பட்டதாக வா.சா.ஆ.1 ல் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் கரிவண்டன் தான் கிரையம் பெற்றதாக சொல்லும் கிரைய ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. புல எண்.337/10 ற்கான வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

11) எனது பிராது மற்றும் எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்திலும், வழக்கு சொத்து கரிவண்டனின் கிரைய சொத்து என்று சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் சொத்து விவரத்தில் சப்பானி நிலத்திற்கு கிழக்கு என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் மேற்படி சப்பானிக்கு மேற்படி நிலம் பாத்தியம் அல்ல, பின்னர் VAO விடம் ஆதாரத்தை காட்டினேன், அவர் என் பெயரில் மேற்படி சொத்திற்கு ஆவணத்தை மாற்றி கொடுத்துவிட்டார்.

12) வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் சொத்து விவரத்தில் கண்ட சப்பானி என்பவரின் நிலம் தான் புல எண்.337/9 என்றால் சரிதான். புல எண்.337/9 ஐ பொறுத்து VAO என் பெயரில் மாற்றி கொடுத்ததற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்துக்களான புல எண்.337/9, 337/10 ஆகியவை அரசு ஆவணங்களில் அரசுக்கு சொந்தமான தரிசு என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

13) எனது பிராது தபசில் புல எண்.337/9 அரசுக்கு சொந்தமான தரிசு என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது பிராது வழக்கு சொத்துக்களை அம்மையப்ப முத்தரையர் ஆக்கிரமித்து வைத்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல, நான் அவ்வாறு சொல்லவில்லை. கரிவண்டன் எந்த சொத்தில் தனது அனுபவத்தில் வைத்து அனுபவித்து வந்தார் என்று எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

14) வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் கண்ட சொத்தை எனது தகப்பனார் கிரையம் பெறுவதற்கு முன்பு யார் அனுபவித்து வந்தார் என்ற விவரத்தை எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது பிராது வழக்கு சொத்துக்களை அம்மையப்ப முத்தரையர் அனுபவித்து வந்ததாகவும், அதனை பொறுத்து வருவாய் துறையில் அங்கரித்துள்ளதாகவும் கூறியுள்ளேன், அது தொடர்பான ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. எனது பிராது மற்றும் எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்திலும், எந்த சொத்தை எனது தந்தை கிரையம் பெற்றார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

15) வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் மூலம் எனது தந்தை கிரையம் பெற்றதாக சொல்லும் சொத்தை பொறுத்து, கிரையம் பெற்ற காலமான 1981 முதல் எனது தந்தை இறந்த காலமான 1998 வரை எனது தந்தை பெயரில் பட்டா பெற எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். 1998 ற்கு பிறகு 2013 வரை என் பெயரில் வழக்கு சொத்துக்களுக்கு பட்டா பெற எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

16) புல எண்.337/9, 337/10 ஆகியவற்றில் தற்போது தென்வடல் தார் சாலை செல்கிறது என்றால் சரிதான். மேற்படி தார் சாலை அமைப்பதற்கு முன்பு அது மண் ரோடாக 1982 ஆண்டிலிருந்தே உள்ளது என்றால் சரிதான். மேற்படி தார் சாலை அளவு 30 அடி அகலம் இருக்கும் என்றால் சரிதான். மேற்படி 30 அடி அகல தார் சாலைக்கு பிறகும், இருபுறமும் மண் ரோடு உள்ளது என்றால் சரியல்ல.

17) 2014 ல் தாக்கல் செய்த எனது பிராதில் புல எண்.337/9, 337/10 ஆகியவற்றில் தற்போது தென்வடல் தார் சாலை செல்கிறது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். எனது பிராது மற்றும் எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்திலும், புல எண்.337/9 ன் விஸ்தீரணம் என்ன என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 13.04.2013 ல் வழக்கு சொத்துக்களை சர்வேயர் அளந்ததற்கு ஆதரவாக எவ்வித ஆவணங்களையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(5 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கானது ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒப்பம்/– ப. கோபாலஅரசி,

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.
இலால்குடி.

/உண்மை நகல்/

P GOPALA ARASI Digitally signed by P GOPALA ARASI

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.